# அலகு 7 நிறுமக் கணக்குகள்

## முக்கிய சூத்திரங்கள், மாதிரிப் படிவங்கள் மற்றும் பயிற்சி கணக்குகள்

1. **நேர்மைப் பங்குகள் வெளியிடுவதற்கான செயல்முறைகள்**

   அ) பங்குகள் வாங்க அழைப்பு விடுதல்

   ஆ) விண்ணப்பம் பெறுதல்

   இ) பங்குகள் ஒதுக்கீடு

2. **ரொக்கத்திற்கு தவணை முறையில் பங்குகளை வெளியிடுதல்**

   1. முதல் தவணை – விண்ணப்பத் தொகை
   2. இரண்டாம் தவணை - ஒதுக்கீட்டுத் தொகை
   3. மூன்றாம் தவணை – முதல் அழைப்புத் தொகை
   4. கடைசித் தவணை - இரண்டாம் அல்லது இறுதி அழைப்பு

3. **பங்குகளை வெளியிடும் முறைகள்**

   1. முகமதிப்பில் வெளியிடுதல் (பங்கின் விலையிலேயே)
   2. முனைமத்தில் வெளியிடுதல் (முகமதிப்பை விட அதிக விலைக்கு)

4. **பங்குகளை ரொக்கத்திற்காக முகமதிப்பில் வெளியிடுவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | **1. விண்ணப்பத் தொகை பெறும்போது** | | | | |
| | வங்கி க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு | | | | xxx |
| | **2. பங்கு ஒதுக்கீட்டின் போது விண்ணப்பத் தொகையை மாற்றுவதற்கு** | | | | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | xxx |
| | **3. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான விண்ணப்பத் தொகையை திரும்பச் செலுத்துதல்** | | | | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு | ப | | xxx | |
| | வங்கி க/கு | | | | xxx |
| | **4. ஒதுக்கீட்டுத்தொகை பெறவேண்டியது** | | | | |
| | நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | xxx |
| | **5. ஒதுக்கீட்டுப் பணம் பெறும்போது** | | | | |
| | வங்கி க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்கு ஒதுக்கீடு க/கு | | | | xxx |
| | **6. அழைப்பின் போது அழைப்புத் தொகை பெற வேண்டியது** | | | | |
| | நேர்மைப் பங்கு அழைப்பு க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | xxx |
| | **7. அழைப்பு பணம் பெறும்போது** | | | | |
| | வங்கி க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்கு அழைப்பு க/கு | | | | xxx |

www.Padasalai.Net

5. **மிகை ஒப்பம்:**

வெளியிடப்பட்ட பங்குகளை விட விண்ணப்பிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பின் அதனை மிகை ஒப்பம் எனப்படும். மிகை ஒப்பம்

1. நிராகரிக்கப்படலாம்
2. விகிதாசாரத்தில் ஒதுக்கீடு செய்யலாம்
3. மிகுதியாக உள்ள பங்குகளில் பாதி பங்குகள் நிராகரிக்கப்பட்டு பாதி பங்குகள் விகிதாசாரத்தில் வெளியிடலாம்

6. **அழைப்பு முன்பணம்:**

மாணவர் குறிப்பு

ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள் மீது கூடுதலாகப் பெறப்பட்ட விண்ணப்பத் தொகையை ஒதுக்கீட்டுப் பணத்தில் சரிக்கட்டிய பிறகு அதிகமாக உள்ள தொகை அழைப்பு முன்பணக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் பின்வருமாறு:

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | **(அ) ஒதுக்கீடு மற்றும் அழைப்பின் போது பெறப்பட்ட முன்பணத்திற்கு** | | | |
| | வங்கி க/கு ப | | xxx | |
| | அழைப்பு முன்பணக் க/கு | | | xxx |
| | **(ஆ) அழைப்புக் கணக்கில் சரிசெய்யப்படும்போது** | | | |
| | அழைப்பு முன்பணக் க/கு ப | | xxx | |
| | பங்கு அழைப்பு க/கு | | | xxx |

7. **அழைப்பு நிலுவை:**

**(i) அழைப்பு நிலுவைக் கணக்கு துவங்காதபோது**

இம்முறையில் பங்குதாரர்களால் செலுத்தப்படாத குறிப்பிட்ட அழைப்புத் தொகையினை, அவற்றை செலுத்தும் வரை அல்லது ஒறுப்பிழப்பு செய்யும் வரை அது குறிப்பிட்ட அழைப்பு நிலுவைக் கணக்கில் காட்டப்படும்.

**(ii) அழைப்பு நிலுவைக் கணக்கு துவங்கும்போது**

இம்முறையில், பங்குதாரர்களால் செலுத்தப்படாத அழைப்புத் தொகை, அழைப்பு நிலுவை என்ற ஒரு தனிக்கணக்கிற்கு பற்று செய்து மாற்றப்படுகிறது. அழைப்பு நிலுவைத் தொகை வசூலிக்கப்படும் போது அல்லது பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யும்போது அழைப்பு நிலுவைக் கணக்கு வரவு வைக்கப்படும்.

8. **பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தல்:**

நிறுமத்தின் ஏடுகளில் பின்வரும் குறிப்பேட்டுப் பதிவு செய்யப்பட வேண்டும்.

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு (அழைக்கப்பட்ட முதல்) ப | | xxx | |
| | பங்கு ஒதுக்கீடு க/கு (நிலுவையில் உள்ளது) | | | xxx |
| | பங்கு அழைப்பு க/கு (நிலுவையில் உள்ளது) | | | xxx |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு (இதுவரை செலுத்திய தொகை) | | | xxx |
| | (ஒதுக்கீட்டுப்பணம் மற்றும் அழைப்பு பணம் செலுத்தாததால் பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன) | | | |

**குறிப்பு:** பங்கு ஒறுப்பிழப்பின் போது அழைக்கப்பட்ட தொகை (பங்குமுதல்),பெறப்பட்ட தொகை(பங்கு ஒறுப்பிழப்பு),பெறப்படாத தொகை(நிலுவைத் தொகை என்பதை புரிந்து கொள்ளவும்)

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

9. **ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் மறுவெளியீடு :**

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | (i) முகமதிப்பில் மறுவெளியீடு செய்தால் | | | |
| | வங்கி க/கு ப | | xxx | |
| | பங்குமுதல் க/கு | | | xxx |
| | (ii) முனைமத்தில் மறுவெளியீடு செய்தால் | | | |
| | வங்கி க/கு ப | | xxx | |
| | பங்குமுதல் க/கு | | | xxx |
| | பத்திர முனைமக் க/கு | | | xxx |
| | (iii) நட்டத்தில் மறுவெளியீடு செய்தால் | | | |
| | வங்கி க/கு ப | | xxx | |
| | ஒறுப்பிழப்பு க/கு (நட்டத்தில் வெளியிடுதல்) ப | | xxx | |
| | பங்குமுதல் க/கு | | | xxx |

மறுவெளியீட்டு விலை ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளின் செலுத்தப் பெறாத தொகையை விட அதிகமாக இருப்பின், அதன் விளைவு மறுவெளியீட்டின் இலாபமாகும். அது ஒரு முதலின இலாபமாகும். அது முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். அதற்கான குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு.

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | ஒறுப்பிழப்பு க/கு ப | | xxx | |
| | முதலினக் காப்பு க/கு | | | xxx |

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில் ஒரு பகுதி பங்குகள் மட்டும் மறுவெளியீடு செய்யப்பட்டால், மறுவெளியீட்டில் கிடைத்த இலாபத் தொகை மறுவெளியீடு செய்யப்பட்ட பங்குகளின் விகிதாச்சார அளவிற்கு முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்படும். அந்த விகிதாச்சாரத் தொகை பின்வருமாறு கணக்கிடப்படும்.

$$\frac{\text{ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட மொத்தத் தொகை}}{\text{ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட மொத்த பங்குகளின் எண்ணிக்கை}} \times \text{மறுவெளியீடு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை}$$

பங்குகள் ஒறுப்பிழப்பு கணக்கில் மீதம் உள்ள தொகை இருப்புநிலைக் குறிப்பில் பங்கு முதல் கணக்குக்கு கீழ் தனி தலைப்பில் காட்டப்படும். அந்த கணக்குகளின் குறிப்புகள் கீழ் தரப்படும்.

10. **மொத்தத் தொகையில் ரொக்கத்திற்கு பங்குகளை வெளியீடு செய்தல்:**

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | (i) விண்ணப்பத் தொகை பெறும்போது | | | |
| | வங்கி க/கு ப | | xxx | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு | | | xxx |
| | (ii) விண்ணப்பத் தொகையை மாற்றும் போது | | | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப | | xxx | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | xxx |
| | பத்திர முனைமக் க/கு (முனைமத்தில் வெளியிட்டால்) | | | xxx |

11. **ரொக்கத்திற்கு அல்லாது மறுபயனுக்காக பங்குகளை வெளியீடு செய்தல்:**

(சொத்துகள் அல்லது நிறுமத்தை கொள்முதல் செய்து பணம் செலுத்தாமல் பங்குகளாக செலுத்துதல்)

www.Padasalai.Net

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | (i) சொத்துகளை வாங்கும்போது | | | | |
| | குறிப்பிட்ட சொத்து க/கு | ப | | xxx | |
| | விற்பனையாளர் க/கு | | | | xxx |
| | (ii) பங்குகளை வெளியிடும்போது | | | | |
| | விற்பனையாளர் க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | xxx |
| | பத்திர முனைமக் க/கு (முனைமத்தில் வெளியிட்டால்) | | | | xxx |

எ

12. <u>பங்குகளை முனைமத்தில் வெளியிட்டால்</u>

| நாள் | விவரம் | | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|---|
| | (i) முனைமமானது விண்ணப்பத்தொகையுடன் பெறப்பட்டால் | | | | |
| | (அ) விண்ணப்பத் தொகை பெறும்போது (விண்ணப்பத் தொகை + முனைமம்) | | | | |
| | வங்கி க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு | | | | xxx |
| | (ஆ) விண்ணப்பத் தொகையினை மாற்றும் போது | | | | |
| | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | xxx |
| | பத்திர முனைமக் க/கு | | | | xxx |
| | (ii) முனைமமானது ஒதுக்கீட்டுத் தொகை/ அழைப்புத் தொகையுடன் பெறப்பட்டால் | | | | |
| | (அ) ஒதுக்கீட்டுத்தொகை/அழைப்புத்தொகை பெற வேண்டியது (ஒதுக்கீட்டுத் தொகை / அழைப்புத் தொகை + முனைமம்) | | | | |
| | நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு/அழைப்பு க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | | | | xxx |
| | பத்திர முனைமக் க/கு | | | | xxx |
| | (ஆ) ஒதுக்கீட்டு / அழைப்புத் தொகை பெறும்போது | | | | |
| | வங்கி க/கு | ப | | xxx | |
| | நேர்மைப்பங்கு ஒதுக்கீட்டு / அழைப்பு க/கு | | | | xxx |
| | (iii) பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும் போது (முனைமம் பெறப்படாத போது) | | | | |
| | நேர்மைப் பங்குமுதல் க/கு | ப | | xxx | |
| | பத்திர முனைமக் க/கு | ப | | xxx | |
| | நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு | | | | xxx |
| | நேர்மைப் பங்கு அழைப்பு க/கு | | | | xxx |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு | | | | xxx |

மாணவர் குறிப்பு: ஏற்கனவே முனைமத்தொகை பெறப்பட்ட பங்குகளை ஒறுப்பிழப்பு செய்யும்போது பத்திர முனைமக் கணக்கில் பற்று வைக்கக் கூடாது.

www.Padasalai.Net

## நினைவில் கொள்ள வேண்டியவை

- அங்கீகரிக்கப்பட்ட முதல் என்பது அமைப்பு முறையேட்டின் படி, அங்கீகரிக்கப்பட்ட அதிகபட்ச தொகையாகும்.
- ஒப்பிய முதலின் ஒரு பகுதி காப்பு முதலாகும். இது நிறுமம் கலைக்கப்படும் போது அழைக்கப்படும்.
- ஒரு பொது நிறுமம் நேர்மைப் பங்குகளை தகவலறிக்கை மூலம் வெளியிட அழைப்பு விடுவதை பொது வெளியீடு என்று அழைக்கிறோம்.
- பங்கு முதலினை தவணை முறையில் பெறும்போது, முதல் தவணை விண்ணப்பத் தொகை என்று அழைக்கப்படும்.
- வெளியிடப்பட்ட பங்குகளைவிட, குறைவான பங்குகள் ஏற்பு செய்வதை குறை ஒப்பம் என்று கூறுவர்.
- தகவலறிக்கையில் சொல்லப்பட்ட குறுமப்பங்கொப்பம் பெறப்பட்டவுடன் கிடைக்கும் போது ஒரு நிறுமம், பங்குகளைப் பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம்.
- விண்ணப்பங்களை ஒதுக்கீடு செய்யும் போது பங்குகளை விகித அளவில் ஒதுக்குவது விகித அளவு அடிப்படை ஒதுக்கீடு என்று அழைக்கப்படுகிறது.
- பங்குகளின் அழைக்கப்பட்டத் தொகையைவிட கூடுதலான தொகைச் செலுத்தப்பட்டால் அது அழைப்பு முன் பணம் எனப்படும்.
- ஒரு பங்குதாரர் ஒதுக்கீடு அல்லது அழைப்புகளில் தொகையினைச் செலுத்த தவறினால், செலுத்தாமல் உள்ள தொகை அழைப்பு நிலுவை என்று அறியப்படும்.
- ஒரு நிறுமம் பங்குகளை அதன் முகமதிப்பினைவிட கூடுதலாக வெளியிடுவதை, முனைமத்தில் வெளியிடல் என்கிறோம்.

### ***பயிற்சி கணக்குகள்***

1. **புராகிரஸ் வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (50000x2)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 100000 | 100000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (50000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | 100000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (50000x4)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 200000 | 200000 |
| | வங்கி க/கு ப (50000x4)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 200000 | 200000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு ப (50000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | 100000 |
| | வங்கி க/கு ப (50000x2)<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 100000 | 100000 |
| | பங்கு இரண்டாம்/இறுதி அழைப்பு க/கு ப (50000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு இறுதி அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | 100000 |
| | வங்கி க/கு ப (50000x2)<br>பங்கு இரண்டாம்/இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு இறுதி அழைப்புத் தொகை பெற்றது) | | 100000 | 100000 |

2. குறை ஒப்பம்:

சம்பத் வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (24000x3)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 72000 | 72000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (24000x3)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 72000 | 72000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (24000x4)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு ஒப்பீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 96000 | 96000 |
| | வங்கி க/கு ப (24000x4)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒப்பீட்டுத் தொகை பெற்றது) | | 96000 | 96000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு ப (24000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 72000 | 72000 |
| | வங்கி க/கு ப (24000x2)<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 72000 | 72000 |
| | பங்கு இரண்டாம்/இறுதி அழைப்பு க/கு ப (24000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு இறுதி அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 72000 | 72000 |
| | வங்கி க/கு ப (24000x2)<br>பங்கு இரண்டாம்/இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு இறுதி அழைப்புத் தொகை பெற்றது) | | 72000 | 72000 |

மிகை ஒப்பம்:

3. சரண்யா வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (30000x3)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 90000 | 90000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (20000x3)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 60000 | 60000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (10000x3)<br>வங்கி க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை திருப்பிச் செலுத்தியது) | | 30000 | 30000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (20000x4)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 80000 | 80000 |
| | வங்கி க/கு ப (20000x4)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 80000 | 80000 |
| | பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு ப (20000x3)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 60000 | 60000 |
| | வங்கி க/கு ப (20000x3)<br>பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 60000 | 60000 |

4. **கஜா வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (50000x2)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 100000 | <br>100000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (50000x2)<br>பங்கு முதல் க/கு (40000x2)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | <br>80000<br>20000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (40000x5)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 200000 | <br>200000 |
| | வங்கி க/கு ப (200000-20000)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 180000 | <br>180000 |
| | பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு ப (40000x3)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 120000 | <br>120000 |
| | வங்கி க/கு ப (40000x3)<br>பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 120000 | <br>120000 |

5. **லலிதா வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

மொத்தப் பங்குகள் வெளியீடு 30000, பெறப்பட்ட விண்ணப்பம் 50000 பங்குகள்

மிகுதியான விண்ணப்பம் 20000 x 2=40000

திருப்பிய விண்ணப்பம் 5000 x 2=10000

ஒதுக்கீட்டுக்குப் பயன் படுத்தியது 15000 x 2=30000

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (50000x2)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 100000 | <br>100000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (50000x2)<br>பங்கு முதல் க/கு (30000x2)<br>வங்கி க/கு (5000x2)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு (15000x2)<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | <br>60000<br>10000<br>30000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (30000x3)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 90000 | <br>90000 |
| | வங்கி க/கு ப (90000-30000)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 60000 | <br>60000 |

**அழைப்பு முன்பணம்:**

6. **அஞ்சலி மாவு அரைக்கும் வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (30000x2)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 60000 | <br>60000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (30000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 60000 | <br>60000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (30000x5)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 150000 | 150000 |
| | வங்கி க/கு ப (30000x5)+ (500x3)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு (30000x5)<br>பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு (500x3)<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை மற்றும் அழைப்பு முன்பணம் பெற்றது) | | 151500 | 150000<br>1500 |
| | பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு ப (28500x3)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 85500 | 85500 |
| | வங்கி க/கு ப (20000x3)<br>பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 85500 | 85500 |

**அழைப்பு நிலுவை:**

7. **முத்து வரையறு நிறுமத்தின் பங்குகள் நிலுவைக்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு ப (50000x4)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 200000 | 200000 |
| | வங்கி க/கு ப (49000x4)<br>அழைப்பு நிலுவை க/கு ப (1000x4)<br>பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 196000<br>4000 | 200000 |

**பங்குகள் ஒறுப்பிழப்பு:**

8. **வானவில் மின்பொருள் வரையறு நிறுமத்தின் பங்குகள் ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (1000x10)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (1000x7)<br>பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு(1000x3)<br>(பங்கு ஒறுப்பிழப்பு செய்தது) | | 10000 | 7000<br>3000 |

9. **---------- வரையறு நிறுமத்தின் பங்குகள் ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (50x8)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (50x2)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு (50x4)<br>பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு(50x2)<br>(பங்கு ஒறுப்பிழப்பு செய்தது) | | 400 | 100<br>200<br>100 |

**பங்குகள் ஒறுப்பிழப்பு மறுவெளியீடு:**

10. **கௌதம் வரையறு நிறுமத்தின் பங்குகள் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (500x10)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (500x8)<br>பங்கு இறுதி அழைப்பு க/கு (500x2)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 5000 | 4000<br>1000 |
| | வங்கி க/கு ப (500x8)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (500x2)<br>பங்கு முதல் க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 4000<br>1000 | 5000 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (4000-1000)<br>முதலினக் காப்பு க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 3000 | 3000 |

11. **<u>நிவேதா வரையறு நிறுமத்தின் பங்குகள் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு</u>**

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில் ஒரு பகுதி பங்குகள் மட்டும் மறுவெளியீடு செய்யப்பட்டால், மறுவெளியீட்டில் கிடைத்த இலாபத் தொகை மறுவெளியீடு செய்யப்பட்ட பங்குகளின் விகிதாச்சார அளவிற்கு முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்படும். அந்த விகிதாச்சாரத் தொகை பின்வருமாறு கணக்கிடப்படும்.

$$\frac{\text{ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட மொத்தத் தொகை}}{\text{ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட மொத்த பங்குகளின் எண்ணிக்கை}} \times \text{மறுவெளியீடு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை}$$

பங்குகள் ஒறுப்பிழப்பு கணக்கில் மீதம் உள்ள தொகை இருப்புநிலைக் குறிப்பில் பங்கு முதல் கணக்குக்கு கீழ் தனி தலைப்பில் காட்டப்படும். அந்த கணக்குகளின் குறிப்புகள் கீழ் தரப்படும்.

∴ 6000/1000 x800=4800 – 2400=**2400(முதலினக் காப்பு)** அல்லது

**<u>குறிப்பு:</u>** ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்த பங்குகள் என நினைத்துக் கொள்ளவும் ∴ 800x6=4800 – 2400 =2400

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (1000x10)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (1000x6)<br>பங்கு இறுதி அழைப்பு க/கு (1000x4)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 10000 | <br>6000<br>4000 |
| | வங்கி க/கு ப (800x7)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (800x3)<br>பங்கு முதல் க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 5600<br>2400 | <br><br>8000 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப *(4800-2400)<br>முதலினக் காப்பு க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 2400 | <br>2400 |

12. **<u>நதியா ஜவுளி வரையறு நிறுமத்தின் பங்குகள் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு</u>**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (100x8)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (100x6)<br>பங்கு இறுதி அழைப்பு க/கு (100x2)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 800 | <br>600<br>200 |
| | வங்கி க/கு ப (75x7)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (75x1)<br>பங்கு முதல் க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 525<br>75 | <br><br>600 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப *(450-75)<br>முதலினக் காப்பு க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 375 | <br>375 |

**பயிற்சி எண் 11-ல் கொடுக்கப்பட்ட குறிப்பையும் விளக்கத்தையும் பயிற்சி எண் 12-க்கு பயன்படுத்தவும்.**

13. **<u>சைமன் வரையறு நிறுமத்தின் பங்குகள் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு</u>**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (2000x10)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (2000x8)<br>பங்கு இறுதி அழைப்பு க/கு (2000x2)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 20000 | <br>16000<br>4000 |
| | வங்கி க/கு ப (2000x8)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (2000x2)<br>பங்கு முதல் க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 16000<br>4000 | <br><br>20000 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (16000-4000)<br>முதலினக் காப்பு க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 12000 | <br>12000 |

www.Padasalai.Net

14. காஞ்சனா வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (70000x1)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 70000 | 70000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (50000x1)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 50000 | 50000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (8000x1)<br>வங்கி க/கு<br>(பங்கு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது) | | 8000 | 8000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (12000x1)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(மிகை விண்ணப்பத் தொகை திருப்பி செலுத்தப்பட்டது) | | 12000 | 12000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (50000x5)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 250000 | 250000 |
| | வங்கி க/கு ப (250000-12000)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 238000 | 238000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு ப (50000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | 100000 |
| | வங்கி க/கு ப (50000x2)<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 100000 | 100000 |
| | பங்கு இரண்டாம்/இறுதி அழைப்பு க/கு ப (50000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு இறுதி அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | 100000 |
| | வங்கி க/கு ப (48500x2)<br>பங்கு இரண்டாம்/இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு இறுதி அழைப்புத் தொகை பெற்றது) | | 97000 | 97000 |
| | பங்கு முதல் க/கு ப (1500x10)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (1500x8)<br>பங்கு இறுதி அழைப்பு க/கு (1500x2)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 15000 | 12000<br>3000 |
| | வங்கி க/கு ப (1200x8)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (1200x2)<br>பங்கு முதல் க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 9600<br>2400 | 12000 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (9600-2400)<br>முதலினக் காப்பு க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 7200 | 7200 |

முனைமத்தில் பங்குகள் வெளியிடுதல்:

15. விஸ்வநாத் அறைகலன் வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு

பங்கு முதல் 20000x10=200000 பங்கு முனைமம் 20000x2=40000

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (30000x2)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 60000 | 60000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (20000x2)<br>பங்கு முதல் க/கு (20000x2)<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 40000 | 40000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்கு விண்ணப்ப க/கு ப (10000x2)<br>வங்கி க/கு (10000x2)<br>(பங்கு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது) | | 20000 | 20000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (20000x5)<br>பங்கு முதல் க/கு (20000x3)<br>பங்கு முனைமம் க/கு (20000x2)<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | 60000<br>40000 |
| | வங்கி க/கு ப (20000x5)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 100000 | 100000 |
| | பங்கு முதல் /இறுதி அழைப்பு க/கு ப(20000x5)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் /இறுதி அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | 100000 |
| | வங்கி க/கு ப (50000x2)<br>பங்கு முதல் /இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு முதல் /இறுதி அழைப்புத் தொகை பெற்றது) | | 100000 | 100000 |

16. **யுனைட் இண்டஸ்ட்ரிஸ் வரையறு நிறுமத்தின் பங்குகள் ஒறுப்பிழப்பிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

1. **இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு செலுத்த தவறியதால் செய்த ஒறுப்பிழப்பு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (250x10)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (250x8)<br>பங்கு இறுதி அழைப்பு க/கு (250x2)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 2500 | 2000<br>500 |

2. **ஒதுக்கீடு,முதல்,இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு செலுத்த தவறியதால் செய்த ஒறுப்பிழப்பு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (250x10)<br>பங்கு முனைமம் க/கு ப (250x1)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (250x3)<br>பங்கு ஒதுக்கீடு க/கு (250x4)<br>பங்கு முதல் அழைப்பு க/கு (250x2)<br>பங்கு இறுதி அழைப்பு க/கு (250x2)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 2500<br>250 | 750<br>1000<br>500<br>500 |

3. **ஒதுக்கீடு,முதல்,இரண்டாம் மற்றும் இறுதி அழைப்பு செலுத்த தவறியதால் செய்த ஒறுப்பிழப்பு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் க/கு ப (250x8)<br>பங்கு முனைமம் க/கு ப (250x1)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (250x3)<br>பங்கு ஒதுக்கீடு க/கு (250x4)<br>பங்கு முதல் அழைப்பு க/கு (250x2)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 2000<br>250 | 750<br>1000<br>500 |

17. **கஸ்தூரி வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (30000x3)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 90000 | 90000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (20000x3)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 60000 | 60000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (10000x3)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை ஒதுக்குகீட்டிற்கு மாற்றப்பட்டது) | | 30000 | 30000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (20000x5)<br>பங்கு முதல் க/கு (20000x3)<br>பங்கு முனைமம் க/கு (20000x2)<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 100000 | <br>60000<br>40000 |
| | வங்கி க/கு ப (20000x5)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 100000 | <br>100000 |
| | பங்கு முதல் அழைப்பு க/கு ப (20000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 40000 | <br>40000 |
| | வங்கி க/கு ப (19500x2)<br>பங்கு முதல் அழைப்பு க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை பெற்றது) | | 39000 | <br>39000 |
| | பங்கு இரண்டாம்/இறுதி அழைப்பு க/கு ப (20000x2)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு இறுதி அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 40000 | <br>40000 |
| | வங்கி க/கு ப (19500x2)<br>பங்கு இரண்டாம்/இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு இறுதி அழைப்புத் தொகை பெற்றது) | | 39000 | <br>39000 |
| | பங்கு முதல் க/கு ப (500x10)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (500x6)<br>பங்கு இறுதி அழைப்பு க/கு (500x4)<br>(பங்கு முதல் அழைப்புத் முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 5000 | <br>3000<br>2000 |
| | வங்கி க/கு ப (400x8)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (400x2)<br>பங்கு முதல் க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 3200<br>800 | <br><br>4000 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (2400-800)<br>முதலினக் காப்பு க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 1600 | <br>1600 |

**குறிப்பு:**

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில் ஒரு பகுதி பங்குகள் மட்டும் மறுவெளியீடு செய்யப்பட்டால், மறுவெளியீட்டில் கிடைத்த இலாபத் தொகை மறுவெளியீடு செய்யப்பட்ட பங்குகளின் விகிதாச்சார அளவிற்கு முதலினக் காப்பு கணக்கிற்கு மாற்றப்படும். அந்த விகிதாச்சாரத் தொகை பின்வருமாறு கணக்கிடப்படும்.

$$\frac{\text{ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட மொத்தத் தொகை}}{\text{ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட மொத்த பங்குகளின் எண்ணிக்கை}} \times \text{மறுவெளியீடு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை}$$

பங்குகள் ஒறுப்பிழப்பு கணக்கில் மீதம் உள்ள தொகை இருப்புநிலைக் குறிப்பில் பங்கு முதல் கணக்குக்கு கீழ் தனி தலைப்பில் காட்டப்படும். அந்த கணக்குகளின் குறிப்புகள் கீழ் தரப்படும்.

18. **வைரம் வரையறு நிறுமத்தின் பங்குகள் வெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (60000x6)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 360000 | <br>360000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (60000x6)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 360000 | <br>360000 |
| | பங்கு ஒதுக்கீட்டு க/கு ப (60000x4)<br>பங்கு முதல் க/கு (60000x2)<br>பங்கு முனைமம் க/கு (60000x2)<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 240000 | <br>120000<br>120000 |
| | வங்கி க/கு ப (59000x4)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>(பங்கு ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது) | | 236000 | <br>236000 |

www.Padasalai.Net

| | | | | |
|---|---|---|---|---|
| | பங்கு முதல் அழைப்பு க/கு ப (60000x2)<br>பங்கு முதல/இறுதி க/கு<br>(பங்கு முதல் அழைப்புத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 120000 | 120000 |
| | வங்கி க/கு ப (59000x2)<br>பங்கு முதல் /இறுதி அழைப்பு க/கு<br>(பங்கு முதல/இறுதி அழைப்புத் தொகை பெற்றது) | | 118000 | 118000 |
| | பங்கு முதல் க/கு ப (1000x10)<br>பங்கு முனைமம் க/கு ப (1000x2)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு (1000x6)<br>பங்கு ஒதுக்கீட்டு க/கு (1000x4)<br>பங்கு முதல்/இறுதி அழைப்பு க/கு(1000x2)<br>(பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது) | | 10000<br>2000 | 6000<br>4000<br>2000 |
| | வங்கி க/கு ப (1000x7)<br>பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (1000x3)<br>பங்கு முதல் க/கு (1000x10)<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 7000<br>3000 | 10000 |
| | பங்கு ஒறுப்பிழப்பு க/கு ப (6000-3000)<br>முதலினக் காப்பு க/கு<br>(ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டது) | | 3000 | 3000 |

**ரொக்கத்திற்கு பங்கு வெளியீடு(மொத்தமாக செலுத்துதல்)**

19. **அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (50000x10)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 500000 | 500000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (50000x10)<br>பங்கு முதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 500000 | 500000 |

**ஆ) பங்குகளை ₹2 முனைமத்தில் வெளியிட்டால்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ப (50000x12)<br>பங்கு விண்ணப்ப க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை பெற்றது) | | 600000 | 600000 |
| | பங்கு விண்ணப்ப க/கு ப (50000x12)<br>பங்கு முதல் க/கு (50000x10)<br>பங்கு முனைமம் க/கு (50000x2)<br>(பங்கு விண்ணப்பத் தொகை முதல் க/கிற்கு மாற்றப்பட்டது) | | 600000 | 500000<br>100000 |

**ரொக்கம் தவிர, இதர மறுபயனுக்கு பங்கு வெளியிடல்**

**அ) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | சொத்துகள் க/கு ப<br>சுகுனா அறைகலன் நிறுமம் க/கு<br>(சொத்துகள் வாங்கியது குறித்து) | | 440000 | 440000 |
| | சுகுனா அறைகலன் நிறுமம் க/கு ப<br>பங்கு முதல் க/கு (44000x10)<br>(சொத்து வாங்கியதற்கு பதிலாக பங்குகள் விற்றது) | | 440000 | 440000 |

**ஆ) பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டால்**

440000/11=40000 பங்குகள்


40000 x 10=400000 (பங்குமுதல்) 40000x1=40000(பங்கு முனைமம்)

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| | சொத்துகள் க/கு ப<br>சுகுனா அறைகலன் நிறுமம் க/கு<br>(சொத்துகள் வாங்கியது குறித்து) | | 440000 | <br>440000 |
| | சுகுனா அறைகலன் நிறுமம் க/கு ப<br>பங்கு முதல் க/கு (40000x10)<br>பங்கு முனைமம் க/கு (40000x1)<br>(சொத்து வாங்கியதற்கு பதிலாக பங்குகள் விற்றது) | | 440000 | <br>400000<br>40000 |



**மாணவர் செயல்பாடு 7.4**

விடுபட்ட விவரங்களைக் கொண்டு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை நிறைவு செய்யவும்.

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 1. | ______________ ப<br>பங்கு விண்ணப்பக் க/கு<br>(ஒன்று ₹ 1 வீதம் விண்ணப்பத் தொகை பெற்றது) | | 2,00,000 | <br>______ |
| 2. | பங்கு விண்ணப்பக் க/கு ப<br>பங்குமுதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை ______<br>பங்குகளுக்கான ______ மாற்றப்பட்டது) | | ______ | <br>2,00,000 |

www.Padasalai.Net

விடுபட்ட விவரங்களைக் கொண்டு பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளை நிறைவு செய்யவும்.

| நாள் | விவரம் | பே. ப.எ. | பற்று ₹ | வரவு ₹ |
|---|---|---|---|---|
| 1. | வங்கி க/கு ப<br>பங்கு விண்ணப்பக் க/கு<br>(ஒன்று ₹ 1 வீதம் விண்ணப்பத் தொகை பெற்றது) | | 2,00,000 | <br>2,00,000 |
| 2. | பங்கு விண்ணப்பக் க/கு ப<br>பங்குமுதல் க/கு<br>(பங்கு விண்ணப்பத் தொகை 2,00,000<br>பங்குகளுக்கான பங்கு முதல்க்கு மாற்றப்பட்டது) | | 2,00,000 | <br>2,00,000 |

*உன்னால் சாதிக்க முடியாத காரியம் என்று*
*எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே!!!*

***-சுவாமி விவேகானந்தர்***



R. MUTHUKOODALINGA RAJA, M.Com, B.Ed
KVS HSS, VIRUDHUNAGAR
9442475597, 9842693649

Kindly Send Me Your Key Answers to Our email id - padasalai.net@gmail.com